Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

# இலங்கையிலுள்ள கட்டிட, சிற்பங்களில் பல்லவர் செல்வாக்கு.

த. திலக் ஷன் (T.Thelaxsan),
விரிவுரையாளர், சிற்பத்துறை,
யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம், இலங்கை.
thelaxsingam@gmail,com

48

**ஆய்வுச்சுருக்கம்**

இலங்கை இந்தியாவிற்கு மிக அருகில் அமைந்திருப்பதனால் காலத்திற்கு காலம் சோழ, பாண்டிய, பல்லவ மன்னர்கள் இலங்கையுடன் வர்த்தகம், அரசியல், சமயம், பண்பாடு, கலை, கலாசார ரீதியான தொடர்புகளை பேணி வந்துள்ளனர். இதில் பல்லவர்கள் இலங்கையுடனான தொடர்பினால் இலங்கை கலை வரலாற்றில் குறிப்பிட்டு சொல்லக்கூடிய வகையில் கட்டிடக்கலை, சிற்பக்கலையில் பல மாற்றங்களுடன் வளர்ச்சியடைந்திருக்கின்றது. அவ்வாறு மாற்றங்களுடன் வளர்ச்சியடைவதற்கு பல்லவர்கள் இலங்கையுடன் வர்த்தகம், அரசியல் ரீதியான நடவடிக்கைகளினூடகவே ஏற்பட்டிருக்கின்றது. அது எவ்வாறு என்பது பற்றியும், பல்லவர்களது கட்டிட சிற்பக்கலையின் தனிப்பண்புகள் பற்றியும், அது எவ்வாறு இலங்கையின் கட்டிட சிற்பக்கலையில் மாற்றங்களை ஏற்படுத்தியுள்ளது என்பது பற்றியும், இலங்கையிலுள்ள நாலந்தா கெடிகே என்ற கட்டிட அமைப்பினூடாகவும் இசுருமுனிய விகாரையின் பாறையில் செதுக்கப்பட்டுள்ள யானைகள் நீராடும் காட்சி மற்றும் குதிரைத் தலையும் போர்வீரனும் என்ற புடைப்புச் சிற்பங்களினூடாகவும் அறிய முடிகின்றது.

**முன்னுரை**

இலங்கை நாட்டை பொறுத்த வரையில் 4 பக்கமும் கடலால் சூழப்பட்ட ஒரு தீவாகும். இது இந்தியாவிற்கு மிக அருகில் அமைந்திருப்பதனால் புராதன காலம் தொட்டு இன்று வரை இந்தியாவுடன் மிக நெருங்கிய தொடர்புடைய நாடாகவே விளங்குகின்றது. கலை, கலாசார, சமய, பொருளாதார, மொழி ரீதியாக பெரும்பாலான விடயங்களில் இந்தியாவை ஒத்தே காணப்படுகின்றது. காரணம் அடிக்கடி நிகழும் படையெடுப்புக்களும், இலங்கையில் உள்நாட்டு கலவரங்களினால் அரச குடும்பத்தினர் தென்னிந்தியாவில் தஞ்சமடைதல், வர்த்தக, வாணிப நடவடிக்கைகள் என பலவற்றை குறிப்பிட்டு சொல்லமுடியும். பல்லவர்களுடைய கலைப் பாரம்பரியம் என்கின்ற போது கட்டிட, சிற்பக்கலையையே சிறப்பித்துக் கூறுவர். அவற்றை கட்டிடம் வேறு சிற்பம் வேறு என்று பிரித்துப் பார்க்க முடியாத அளவிற்கு கட்டிடம், சிற்பம் ஆகிய இரண்டும் ஒன்றுடன் ஒன்று தொடர்புபட்டதாகவே காணப்படுகின்றது. கட்டிடங்களை அலங்கரிப்பதற்கும், வழிபாட்டிற்காகவும் தெய்வ விக்கிரகங்களையும், கற்பனை உருவங்களையும் உருவாக்கினர். அவ்வாறு உருவாக்குகின்ற போது பல்லவர்கள் தமக்கே உரித்தான கலையம்சங்களுடன் மிகவும் நேர்த்தியாகவும், உறுதியுடனும் காலம் கடந்து பல நூற்றாண்டு காலம் நிலைத்திருக்கத்தக்க வகையில் அமைத்திருக்கிறார்கள்.

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

இவர்கள் ஆலயம் கட்டுகின்ற முறைமையில் பல புதிய நுட்பங்களை அறிமுகப்படுத்தி சிற்ப சாஸ்திர முறைப்படியும், ஆகம முறைப்படியுமே கோயில்களை கட்டினர். மண்டளி, குடபோகங்கள், கற்றளிகள் என்பன குறிப்பிடத்தக்கன. பல்லவர்களுடைய அதியுச்ச கலைநயம் மிக்க வேலைப்பாடுகள் இலங்கையின் சில பகுதிகளில் இன்றும் அசையாது நீடித்து நிலைத்து நிற்கின்றது. இவற்றை ஒத்த பண்புடைய கட்டிட, சிற்பங்கள் இந்தியாவின் மாமல்லபுரம், காஞ்சிபுரம், எல்லோரா போன்ற இடங்களில் காணப்படுகின்றன. இலங்கையிலுள்ள "நாலந்தா கெடிகே" என்ற கட்டிட அமைப்பினூடாகவும், இசுருமுனிய விகாரையில் உள்ள இயற்கையான பாறையின் மீது செதுக்கப்பட்டுள்ள "குதிரைத் தலையும் போர் வீரனும், "நீரில் விளையாடும் யானைகள்" என்ற சிற்பங்களினூடாகவும் அவற்றில் உள்ள அழகியல் அம்சங்களில் எவ்வாறு பல்லவர்களுடைய தாக்கம் இடம்பெற்றிருக்கின்றது என்பதனை விளக்குவதாக இவ் ஆய்வானது அமைகிறது.

**பல்லவர்களுடனான வர்த்தக ரீதியான தொடர்பும் அதனால் இலங்கையின் கட்டிட சிற்பக்கலையின் வளர்ச்சியும்.**

தமிழகத்திற்கும், ஈழத்திற்கும் இடையிலான மரபுவழியான வாணிபத் தொடர்புகள் பல்லவர் காலத்திலே மேலும் விருத்தி பெற்றன. இலங்கையின் கரையோரப்பகுதிகளிலும், தலைநகரான அநுராதபுரத்தில் உள்ளவர்களும், மற்றும் ஏனைய பிரதேசங்களில் உள்ளவர்களும் தமிழ்நாட்டு வர்த்தகர்களுடன் வர்த்தக நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். இவர்களுடைய வணிக நடவடிக்கைகள் பற்றிய குறிப்புக்கள் இலங்கை சாசனங்களிலே காணப்படுகின்றன. இவ்வாறு வருகை தந்த பலரும் இலங்கையின் அநுராதபுரத்தில் நிலை கொண்டிருந்தனர்.

இவ்வாறாக வாணிபத்தின் மூலமாகவே பல்லவ கலாசாரங்களும், பண்பாட்டு அம்சங்களும் இலங்கையை அடைந்தன. வணிகர்கள் தங்களது வியாபார நிலையங்கள், குடியிருப்புகளுக்கு அருகில் கோயில்களை அமைத்தனர். இந்து சமய கோவில்களும், பௌத்த கோவில்களும் இலங்கையில் ஆதரிக்கப்பட்டன. பல்லவர்களின் ஆட்சியின் கீழ் காணப்பட்ட தொண்டை மண்டலம், சோழமண்டலம் ஆகியவற்றிலே பல்லவர் கலைப்பாணியில் கோயில்கள் அமைக்கப்பட்டன. பல்லவர்களுடைய காலப்பகுதியில் அவர்களுடைய கலைப் பாணியில் அதெற்கெனச் சிறப்பாகவுள்ள பண்புகளோடு வளர்ச்சியடைந்தது. அத்துடன் இலங்கையில் கற்றளியான கோயில்களும் வளர்ச்சிபெறலாகின.

தமிழகத்திலிருந்து இலங்கையின் பல்வேறு பகுதிகளில் தங்கியிருந்த வணிகர்கள் அங்கே கோயில்களினை அமைப்பதற்கு கட்டிடக்கலைஞர்களையும், சிற்பக்கலைஞர்களையும் அழைத்துச் சென்றனர். அவர்கள் மூலமாக பல்லவர்களின் கலாசார அம்சங்கள் பல இலங்கையில் பிரதிபலித்தன. காஞ்சிபுரம் போன்ற நகரங்களில் அமைந்திருந்த பௌத்த சமய நிறுவனங்களும் இலங்கையிலுள்ள நிறுவனங்கள் சிலவற்றோடு தொடர்புகளை ஏற்படுத்தியிருந்தன.

**பல்லவ அரசர்களுக்கும், இலங்கை அரசர்களுக்கும் இடையிலான அரசியல் தொடர்பும் அதனால் கட்டட, சிற்பக்கலைத் துறையில் ஏற்பட்ட மாற்றமும்.**

குறிப்பாக 7ம், 8ம் நூற்றாண்டுகளில் பல்லவர்களுக்கும், இலங்கை அரசர்களுக்கும் இடையில் நெருங்கிய அரசியல் தொடர்பு ஏற்பட்டிருந்தது. இலங்கையின் அநுராதபுரத்தில் தமிழ்ப்படைகளின் தலைவனான பொத்தகுட்டனின் செல்வாக்கு மேலோங்கியிருந்த காலப்பகுதியில் அரசனின் பகைமையை தேடிக்கொண்ட மானவர்மன் எனும் பிரதானி இந்தியாவின் காஞ்சிபுரத்திற்கு சென்று பல்லவனிடம் புகலிடம் பெற்றான். மாமல்லனாகிய நரசிம்மவர்மனின் ஆதரவுடன் அங்கு வாழ்ந்த காலப்பகுதியில் அவர் பல்லவப்படையில் சேர்ந்து அதில் உயர் பதவியும் பெற்றிருந்தான். வாதாபிச்சாளுக்கியர் படையெடுத்து வந்த நேரத்தில் பல்லவ அரசனுக்கு போரிலே பக்கபலமாக நின்று உதவி புரிந்தான். அந்தப் போரிலே பல்லவ மன்னன் வெற்றி பெற்றான். அதன் பயனாக தனது இராட்சியத்தில் வெற்றிவிழா கொண்டாடிய போது மானவர்மனை பாராட்டி கௌரவித்தான். காஞ்சிபுரத்;திலே பல்லவ அரசனோடு வாழ்ந்து அவனது நல்லெண்ணத்தைப் பெற்றுவிட்டதால், மானவர்மன் தனது இலட்சியங்களை இலகுவாக நிறைவேற்றிக்கொள்ள முடிந்தது. அவன் அரச பதவியை பெற்றுக்கொள்ள உதவியாக மாமல்லன் ஒரு பெரும்படையை அவனோடு அனுப்பி வைத்தான். பல்லவப்படை கடல் கடந்து இலங்கையை அடைந்து தலைநகரை நோக்கிச் சென்றதும் இலங்கையிலிருந்த அரசன் தப்பியோடினான். மானவர்மன் தலைநகரை கைப்பற்றுவதற்கு பதிலாக அரசனைப் பின்தொடர்ந்தான். அந்த நேரத்திலே பல்லவ மன்னன் மாமல்லன் நோயினால் துன்பப்பட செய்தி கேட்ட படைகள் பல்லவ தேசம் திரும்பியது. அரசன் பொட்டகுத்தனுடைய ஆதரவுடன் மீண்டும் அதிகாரம் பெற மானவர்மன் நாட்டை விட்டு ஓடினான். மானவர்மன் நீண்டகாலமாக மீண்டும் காஞ்சிபுரத்திலே தங்கியிருந்தான். இறுதியில் மாமல்லன் உதவியுடன் மானவர்மன் மீண்டும் அநுராதபுரத்தை கைப்பற்றி ஆட்சியைப் பெற்றுக்கொண்டான். மானவர்மன் மீண்டும் ஆட்சிபீடம் ஏறியதால் இலங்கைக்கும், பல்லவ தேசத்திற்கும் இடையிலான தொடர்புகள் மேலும் வளர்ச்சியடைந்தமையால் கட்டிடக்கலை, சிற்பக்கலை பல்லவர்களது அம்சங்களை பெருமளவில் உள்வாங்கி வளர்ச்சியடைந்தது.

**பல்லவர்களுடைய கட்டிட, சிற்ப நுட்ப முறைகள்**

பல்லவர்களுடைய படைப்புக்களில் கோயில் கட்டுமான முறைகளும், மற்றும் சிற்ப உருவாக்கமும் சாஸ்திர விதிமுறைகளை அடிப்படையாக கொண்டே அமையப்பெற்றிருக்கும். சிற்ப சாஸ்திரம், ஆகமம் எனும் வகைகளைச் சேர்ந்த நூல்களிற் சொல்லப்படும் விதிகளுக்கு அமையவே கோயில்களும், அவற்றில் உள்ள சிற்பங்களும் அமைக்கப்பட்டிருக்கும். நாகரம், வேஸரம், திராவிடம் என்னும் மூன்று வகையான கோயில் கட்டுமான முறைகளைப் பற்றிச் சிற்ப நூல்கள் கூறும். அவற்றின் சிகரம் முறையே நாற்கோணமாகவும், வட்டமாகவும், எண்கோணமாகவும் அமைந்திருக்கும் என்று சிற்ப நூல்கள் கூறும். நாகரம், வேஸரம், திராவிடம் ஆகிய மூன்று வகைகளும் பிராந்திய மரபுகளை மூலமாக கொண்டு விருத்தி பெற்றவை என்ற கருத்தும் சில சிற்ப சாஸ்திர நூல்களில் கூறப்படுகிறது. இமயம் முதல் விந்தியம் வரையான பரந்த நிலப்பகுதியில் அமைந்துள்ள கோவில்கள் நாகரம் எனப்படும்.

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

தக்கணத்துக் கோயில்கள் வேஸரம் என்னும் வகைக்குரியன. ஆவை கதம்ப நகர கட்டிட முறையினையும் வாதாபிச்சாளுக்கியர் காலத்து கட்டிடக்கலை முறையினையும் மூலமாகக் கொண்டு வளர்ச்சி பெற்றவை. அவற்றிலே நாகரம், திராவிடம் ஆகியவற்றின் அம்சங்கள் கலப்புற்றுள்ளன. ஐகொளே, பட்டதகல், எல்லோரா ஆகிய தலங்களில் அமைந்துள்ள கோயில்கள் இதற்கு சிறந்த எடுத்துக்காட்டாகும்.

கிருஸ்ணா நதிக்கு தெற்கிலுள்ள பகுதிகளில் அமைந்துள்ள கோயில்கள் திராவிடக் கலைப்பாணியில் அமைந்தனவாகும். கலிங்கத்து கலைப்பாணி என்னும் வகையொன்றினைப் பற்றி மத்திய கால சாசனங்களில் குறிப்புண்டு. அது நாகரத்தின் ஒரு பிரிவாகும். திராவிடக் கலைப்பாணியில் 4 வகையான கோயில் அமைப்புக்கள் உள்ளன. அவை மண்டளி, குடபோகம, மலைதளி, கற்றளி என்பனவாகும்.

- **மண்டளி வகை கோவில்:** மிகப்புராதனமானவை, களிமண், செங்கல் என்பவற்றால் அமைக்கப்படும் கோவில்கள் மண்டளி எனப்படும். 10ம் நூற்றாண்டு வரையான பெரும்பாலான கோவில்கள் மண்டளிகளாகவே காணப்பட்டன.
- **குடபோகங்கள்:** குகைகளை குடைந்து அமைக்கப்படும் கோயில்கள் குடபோகம் என்றும், குடைவரை என்றும் அழைக்கப்படும். சமண, பௌத்த, இந்து, வைஷ்ணவ கோயில்கள் உள்ளடங்கலாக இந்த வகை கோயில்கள் காணப்படுகின்றன. இவற்றில் சில அளவில் பெரியனவாகவும், சிற்ப, ஓவியங்களை தன்னகத்தே கொண்டனவாகவும் விளங்குகின்றன. பெரும்பாலான குடபோகங்கள் பல்லவ மன்னர்களான மகேந்திரவர்மன், நரசிம்மவர்மன் ஆகியோரின் காலத்தில் உருவாக்கப்பட்டன.
- **கற்றளிகள்**: திராவிட கலைப்பாணியில் மிக உன்னதமான வளர்ச்சிக்கட்டம் இவற்றோடு உருவாகிறது என்று கருதலாம். மிக உயர்ந்த விமானங்கள், அலங்கார வேலைப்பாடுகள் பொருந்திய மண்டபங்கள், மிக விசாலாமான சுற்றுப்பிரகாரங்கள் முதலிய அம்சங்களோடு கூடிய மிகப் பெரும் கோயில்களை அமைத்துக்கொள்ள முடிந்தது. ராஜசிம்மன் காலத்திலே (695-722) கற்றளிகளைக் கட்டும் வழக்கம் தொடங்கியது.

இவற்றின் தொடரடச்சியாக 7ம, 8ம் நூற்றாண்டு காலப்பகுதியில் பல்லவ கலைப்பாணி இலங்கையிலே பல்வேறு பண்பாட்டு அம்சங்களுடன் இலங்கையில் சில பகுதிகளில் தோற்றம் பெற்றன. அந்த வகையில் இலங்கையில் முதன் முதலாக கற்றளி வகையான கோயில்கள் தோற்றம் பெற்றன. மண்டளியான கோயில்களிலும் பல்லவர் கலைப்பாணி பல அம்சங்களுடன் இடம்பெற்றன.

இந்தியாவின் தமிழகத்திலிருந்து இலங்கையில் தங்கியிருந்து வணிகம் புரிந்த வணிகர்கள் இங்கே ஆலயம் அமைப்பதற்கு கட்டிட, சிற்ப கலைஞர்களை அழைத்து வந்தனர். இதனாலும் பல்லவர்களுடைய கட்டிட, சிற்ப பண்புகள் இலங்கையிலும் செல்வாக்கு செலுத்த காரணமாயிருந்தது. இலங்கையிலுள்ள இந்துக் கோவில்களில் கட்டிட அமைப்பு முறைகளைப் பற்றி விரிவாக ஆராட்சிகள் மேற்கொள்ளப்படவில்லை. அநுராதபுர காலத்து கோவில்களை பற்றி விபரங்களும் அரிதாகவே கிடைத்துள்ளன. அக்காலத்துக் கோயில்கள் பெரும்பாலும் மண்டளிகளாகவே அமைந்திருந்தன.

Pranav Journal of Fine Arts
(A Peer Reviewed Quarterly Online Journal)
ISSN:2582-9513

அதனால் அவை காலப்போக்கில் அழிவடைந்துவிட்டன. அநுராதபுரத்தின் வட பகுதியில் தமிழர்கள் வாழ்ந்த சில பகுதிகளில் மட்டுமே பழமையான சைவக்கோயில்களின் அழிபாடுகள் தொல்பொருள் அகழ்வுகளின் போது கண்டுபிடிக்கப்பட்டன. எல்லாமாக 5 கோவில்களின் அழிபாடுகள் அந்தப் பகுதியில் காணப்பட்டன. அமைப்பில் அவை எல்லாம் ஒரே வடிவமானவை. அளவில் சிறியனவாகவும், கர்ப்பக்கிருகம், அந்தராளம், அர்த்தமண்டபம் எனும் பகுதிகள் அவற்றிலே காணப்படுகின்றன. அக்கோவில்கள் யாவும் செங்கற்களால் அமைக்கப் பெற்றவை. அத்திபாரங்கள் செங்கற்களால் கட்டப்பட்டிருந்தன. அதற்கு ஆதாரமாக கற்றூண்கள் பயன்படுத்தப்பட்டன. கூரைப்பகுதிகள் மரத்தினால் ஆக்கப்பட்டிருந்தன. அவை முற்றாக அழிவடைந்து விட்டன.

பௌத்த சமய கட்டிடங்களில் தென்னிந்திய கலைப்பாணியின் செல்வாக்கு கணிசமான அளவிலேயே ஏற்பட்டிருந்துது. சிங்கள மரபிலே கோயில்களையும், சமய சார்புடைய பிற கட்டிடங்களையும் அமைப்பதற்கு மூன்று வகையான கட்டடப்பொருட்கள் பயன்படுத்தினர். பொதுவாக அடித்தளங்களையும், அத்திபாரங்களையும் கல்லினால் அமைத்தனர். அதன்மேல் கட்டி எழுப்பப்படும் சுவர்ப் பகுதிகள் செங்கற்களால் இடம்பெறும். மரம், ஓடு என்பவற்றினால் கூரை வேயப்பட்டன. அத்தகைய கட்டிடங்கள் சிலவற்றின் அமைப்பிலேயே இந்துக் கோவில்களில் அம்சங்கள் சில இடம்பெற்றுள்ளன.

**நாலந்தா கெடிகே**

பல்லவ பாணியை அடிப்படையாகக் கொண்டு முற்று முழுதாக கற்றளி முறையில் அமைக்கப்பட்டுள்ள கட்டிடத்திற்கு சிறந்த எடுத்துக்காட்டாக இது விளங்குகின்றது. முற்று முழுதாக கல்லால் அமைக்கப்பட்ட கட்டிடம் என்னும் போதே இதில் திராவிடச் செல்வாக்கு வேரூன்றியிருப்பதனையும், இலங்கையில் கற்றளிகளாக அமைக்கும் முறை சிங்களக் கட்டிடங்களில் இல்லாத ஒன்றாக காணப்படுவதனாலும் இது வெளிப்படையாகவே திராவிட மரபினை பின்பற்றியே கட்டப்பட்டுள்ளமையை வெளிக்காட்டுகின்றது. இதனைப் பின்பற்றி வரலாற்றாசிரியர் சே.பரணவிதான அவர்கள் பின்வருமாறு கூறுகின்றார்.

. "இலங்கையில் முற்றிலும் கல்லினால் அமைக்கப்பட்ட கட்டிடங்களில் நாலந்தாவிலுள்ள கெடிகே காலத்தால் மிகவும் முற்பட்டதாகும். அது பல்லவ காலப்பாணியில் அமைந்துள்ளது. எனவே அதன் காலம் 8ம் நூற்றாண்டாகும். அது தாந்திரீகச் சாயல் படிந்த மகாயான வழிபாட்டிற்குரிய கட்டடமாகும். இதன் வரலாறு பற்றி எதுவுந் தெரியவில்லை. அதன் பெயரும் மக்களின் நினைவிலிருந்து காலபோக்கில் மறைந்துவிட்டது"

இந்தக் கட்டட அமைப்பானது அதன் தோற்றத்தில் எல்லா அம்சங்களிலும் தென்னிந்திய கட்டடக்கலைப்பாணியில் அமைந்துள்ளது என்பது பற்றி கலை வரலாற்றாசிரியர்களிடையில் கருத்தொற்றுமை உண்டு.

இந்தக்கட்டிடம் முற்றிலும் கருங்கல் வேலைப்பாடாகும். இதன் கூரையில் அமைந்துள்ள சிகரம் வண்டிக்கூடாரம் போன்ற சாலைச் சிகரமாகும். கோவில் பல தடவைகள் புதுப்பிக்கப்பட்ட போதிலும் அடித்தளங்களை பொறுத்த வரையிலே அதன் வடிவம் மாற்றம் பெறாது இருந்துள்ளது. காஞ்சிபுரத்து

கைலாசநாதர் கோயிலிற் காணப்படும் மகேந்திரவர்மேஸ்வரத்திலுள்ள சாலைச் சிகரத்து கவாஹங்களும் நாலந்தா கெடிகேயிலுள்ள தென்புறத்து கவாஹமும் ஒரே விதமானவையாக காணப்படுகின்றது.

இந்த கட்டிட அமைப்பானது கர்ப்பக்கிருகம், மண்டபம் எனும் இரு பிரதான பகுதிகளை கொண்டிருந்தது. அவற்றுக்கிடையில் அந்தராளம் அமைந்திருந்ததற்கான தடயம் எதுவும் காணப்படவில்லை. இந்த கோயில் 3’ 8” உயரமான அதிஷ்டானத்தில் 3 படைகள் உள்ளன. கர்ப்பக்கிருகத்தை சுற்றி 7’ அகலமான திருச்சுற்று அதிஷ்டானப் பகுதியில் அமைந்துள்ளது. கர்ப்பக்கிருகம் தோற்றத்தில் விமானம் போன்றது. அமைப்பில் சதுரமானது. ஆதன் கூரை பல்லவர் கோயில்களைப் போல தளங்களையும், சிகரத்தையும் பெற்றுள்ளது. கோவிலின் மேற்பகுதியிலுள்ள தளங்களும் அவற்றிடையே காணப்படும் சிற்ப வேலைப்பாடுகளும் பல்லவரின் விமான தளங்களில் உள்ளவற்றுக்கு ஒப்பானவை. அதுவும் குறிப்பாக மாமல்லபுரத்தில் உள்ளவற்றுக்கு ஒப்பானவை. சில கலை விமர்சகர்கள் காஞ்சிபுரத்திலுள்ள கைலாசநாதர் கோயிலை சேர்ந்த மகேந்திரவர்மேஸ்வரத்திலுள்ளதைப் போன்றுள்ளது என கூறியுள்ளனர்.

இலங்கையின் அநுராதபுர காலத்து பௌத்த கோயில்களில் நாலந்தாகெடிகே மட்டுமே முற்றிலுமாக கல்லினால் அமைக்கப்பட்ட கட்டிடமாகும். இது பெரும்பாலும் பல்லவ கலை மரபினை பிரதிபலித்தே நிற்கின்றது. குறிப்பாக அது தமிழகத்திலும், இலங்கையிலும் நிலவிய பௌத்த நிறுவனங்களுக்கிடையிலான தொடர்பினை பிரலிபலிக்கும் வரலாற்றுச் சின்னமாகவும் விளங்குகின்றது. காஞ்சிபுரத்தில் பல்லவர் காலத்தில் பல பௌத்த நிறுவனங்கள் அமைந்திருந்தன. அங்குள்ள சில பௌத்த வாயில்தலங்கள் சைவ, வைஷ்ணவ கோயில்களைப் போல கற்றளிகளாக அமைக்கப்பட்டன என்றும் அவை பல்லவர் கலைப்பாணியில் அமைந்தன எனவும் கருதுவதற்கு இடமுண்டு. அவ்வாறெனில் காஞ்சிபுரத்திலுள்ள பௌத்த கோயில் ஒன்றை முன்மாதிரியாக கொண்டு நாலந்தா கெடிகே அமைக்கப்பட்டிருக்கலாம் என கருதலாம்.

**பல்லவர் பாணியில் இலங்கையில் அமைந்துள்ள சிற்பங்கள்**

**1. குதிரைத் தலையும் போர் வீரனும்**

இசுருமுனியாவில் உள்ள விகாரையின் பாறையில் ஒரு மனிதன் இளைப்பாறி இருப்பது போலவும், அருகே ஒரு குதிரைத்தலையுடன் மிகவும் நேர்த்தியான முறையிலே செதுக்கப்பட்டிருக்கிறது. 7ம் நூற்றாண்டு பல்லவ கலைமரபின் தாக்கம் இச்சிற்பத்தில் இருப்பதாக கூறப்படுகிறது. இயற்கையாக அமைந்துள்ள பாறைச் சுவரில் புடைப்புச்சிற்பமாக செதுக்கியாக்கப்பட்டிருக்கிறது.

இந்த சிற்பத்தினை பற்றி வரலாற்றாசிரியர் ஆனந்த குமாரசுவாமி பின்வருமாறு கூறியுள்ளார்.

“அநுராதபுரத்திலே இசுருமுனிய விகாரை என்று இந் நாட்களிலே சொல்லப்படும் இடத்திலே, பெருங்கற்பாறை ஒன்றின் பகுதி நிலத்தின் மேலே தெரிகிறது. பிளவுண்ட் அப்பாறையின் முன் புறத்திலே செயற்கை முறையில் அமைந்த சிறிய குளமுண்டு. அந்தப்பாறை 7ம் நுரற்றாண்டில் மாமல்லபுரத்திலுள்ள கங்காவதாரம் போன்று சிறிய அளவிலே செதுக்கப்பட்டுள்ளது. பாறையில் ஆசனக்கோலமான வடிவமொன்று அமைந்துள்ளது. அதன் அருகிலே குதிரைத்தலையின் உருவம்

தெரிகிறது. அது கபில முனிவரின் உருவம் போலத் தெரிகிறது. அது தூய்மையான பல்லவர் கலைப் பாணியில் அமைந்திருக்கிறது. இலங்கையிலுள்ள மிகவும் சிறந்த சிற்பங்களில் இதுவும் ஒன்றாகும்.

இந்தியக் கலைகளின் விமர்சகர்களில் ஒருவரான “வின்சென்ற் ஸ்மித்” என்பவரும் அக்கருத்தை ஏற்றுக்கொண்டுள்ளனர்.அவரும் பின்வருமாறு கூறியுள்ளார்.

“இந்தியாவிலும் இலங்கையிலும் உருவாக்கப்பட்ட தலைசிறந்த கலை வடிவங்களில் இதுவும் ஒன்றாகும் என கருதுகிறேன். அதன் கோலம் சாந்தமானது. தோற்றம் கம்பீரமானது. உருவம் அமைந்துள்ள கோலம் கடினமானதெனினும் அது மிகுந்த திறமையோடும் ஒப்பில்லாத எளிமையுடனும் அமைக்கப்பட்டுள்ளது” என்கிறார்.

இந்த புடைப்புச்சிற்பம் பற்றி பேராசிரியர் பரணவிதான அவர்கள் குறிப்பிடுகையில், நீர் மற்றும் அக்னி என்பவற்றின் குறியீடாகவே இந்த படைப்பு உருவாக்கப்பட்டிருக்கின்றது என்கிறார்.

இந்தப்படைப்பு அரைப்புடைப்பு நுட்பமுறையில் உருவாக்கப்படுகிறது. இந்த சிற்பத்திலே வீரனுக்குரிய சுபாவத்துடன் ஒருவன் அமர்ந்திருக்கிறான். அவரின் ஒரு கை நிலத்தில் ஊன்றியவாறும் மறுகை முழங்காலின் மேலாக நீட்டப்பட்ட நிலையிலும் காணப்படுகிறது. மனித உருவின் மேலுடம்பில் பூநூல் காணப்படுகிறது. காதிலே மிகப்பெரிய வளையம் ஒன்றை அணிந்திருப்பது போல செதுக்கப்பட்டிருக்கிறது. கண் தூரநோக்கினை பிரதிபலிக்கிறது. புருவங்கள் வில் போன்ற வளைந்த வடிவமாகவும், மூக்கு மெலிந்து நீண்ட அமைப்பினை கொண்டதாகவும் செதுக்கப்பட்டிருக்கிறது.உடல் நெடியதாகவும், கை கால்கள் மெல்லியதாகவும் காட்டப்பட்டுள்ளமை பல்லவ மரபினையே பிரதிபலித்து நிற்கின்றது.

கர்நாடகத்திலே துங்கபத்திரை ஆற்றங்கரையில் அமைந்துள்ள ஆலம்பூர் எனும் கிராமத்தில் விஸ்வப்பிரம்மா கோவில் ஒன்று உண்டு. அதில் இசுருமுனியாவில் உள்ள சிற்பத்தினைப் போன்று படிமம் ஒன்று உள்ளது. இரண்டு வடிவங்களின் பிரதிமாலஷணங்களும் ஒரே விதமானவை. அதன் அமைப்பு இசுருமுனிய சிற்பத்தில் உள்ளதைப் போல அமைந்திருக்கிறது.

**2. நீரில் விளையாடும் யானைகள்**

இசுருமுனிய விகாரையில் போர் வீரன் சிற்பத்திற்கு அருகிலே இயற்கையாக அமைந்துள்ள பாறையிலே நீரில் விளையாடும் யானைகள் காட்சி அரைப்புடைப்பு சிற்பமாக செதுக்கியாக்கப்பட்டுள்ளது. பாறைப்பிளவின் இடது பக்கத்தில் 4 யானைகள்pன் உருவங்கள் உள்ளன. அவற்றிலே இரண்டு பெரிய யானைகளாகவும், இரண்டு யானைக்குட்டிகளாகவும் செதுக்கப்பட்டிருக்கிறது. வலப்பக்கத்திலே பெரிய யானை உருவம் ஒன்று நீர்நிலையிலிருந்து நீரை அருந்துவதற்கு ஏற்றவாறு துதிக்கையை மேலே உயர்த்திய கோலத்தில் காட்டப்பட்டிருக்கிறது. அதன் கால்களின் அடிப் பாகங்கள் நீரில் அமிழ்ந்த வகையில் செதுக்கப்பட்டிருக்கிறது. இந்த யானை உருவங்கள் பற்றி ஆனந்த குமாரசுவாமி அவர்கள் குறிப்பிடுகையில்,

“மாமல்லபுரத்து சிற்பங்களை முன்மாதிரியாக கொண்டே இசுருமுனிய சிற்பங்கள்அமைக்கப்பட்டுள்ளன”. என்கிறார்.

**முடிவுரை**

பல்லவர்களுடைய சிற்பக்கலை, கட்டிடக்கலை அம்சங்கள் இலங்கையில் செல்வாக்கு செலுத்துவதற்கு அரசியல் படையெடுப்புகள், வர்த்தக வாணிப நடவடிக்கைகள், இந்து சமய வழிபாட்டு தலங்கள் மற்றும் பௌத்த சமய நிறுவனங்கள் என்பனவும் காரணமாக அமைந்திருக்கின்றன. ,லங்கையிலுள்ள நாலந்த கெடிகே கட்டிட அமைப்பினூடாகவும், இசுருமுனிய விகாரையிலுள்ள குதிரைத்தலையும் போர்வீரனும் என்ற புடைப்பு சிற்பத்தினூடாகவும், யானைகள் நீராடும் காட்சி என்ற புடைப்பு சிற்பத்தினூடாகவும் பல்லவர்களுக்கே உரித்தான பல தனிச்சிறப்பு வாய்ந்த பண்புகள் வெளிப்படுத்தப்பட்டிருப்பதை காணமுடிகின்றது. இதற்கு சான்றாக இவற்றை ஒத்த பண்பியல்புகளுடன் கூடிய படைப்புகளை இந்தியாவில் பல்லவர்களுடைய படைப்புக்களில் காணமுடிகின்றமை வரலாற்றுச் சான்றாக விளங்குவதுடன், இலங்கை, இந்தியா கலை, கலாசார, பண்பாட்டு ரீதியில் பெரிதும் ஒத்துப் போவதையும் அவதானிக்க முடிகின்றது.

**உசாத்துணை நூல்கள்**

1. பேராசிரியர் செ.கிருஸ்ணராசா, இலங்கை பண்பாட்டுப் பரிணாமத்தின் அடிப்படைகள், AB Creator & Publishes கொழும்பு-06 இலங்கை, 2012.
2. பேராசிரியர் சி.பத்மநாதன், இந்து கலாசாரம்: கோயில்களும் சிற்பங்களும்,இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் கொழும்பு, 2001.
3. பேராசிரியர் சி.பத்மநாதன், இலங்கையில் இந்துசமயம், அகில இலங்கை இந்து மாமன்றம் - குமரன் புத்தக இல்லம், 2005.
4. S.Paranavithana, civilization of the period : Religion Literature and Art, University of Ceylon Colombo, 1959.
5. Ananda K.Coomareswamy, History of Indian and Indonesian Art, London, 1927.
6. ராம் சரண் சர்மா தமிழில் ரா.ரங்கசாமி (மாஜினி), பண்டைக்கால இந்தியா, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் (பி) லிட் அம்பத்தூர் சென்னை, 2001.
7. க.நவரத்தினம், இலங்கையிற் கலை வளர்ச்சி, குமரன் புத்தக இல்லம்,2007.
8. செ.வைத்தியலிங்கன், சிற்பக்கலை, மெய்யப்பன் பதிப்பகம், 2003.